# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 114/2020

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 7 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பூபதி |
| Father's Name | : | பழனிச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.08.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தாந்தோணிமலை, பாரதிதாசன் நகரில் குடியிருந்து பைனான்சில் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.11.2019 ம் தேதி காலை 08.00 மணியளவில் நானும், எனது நண்பர் சுப்பிரமணியும் கோடாங்கிப்பட்டி - கரூர் ரோட்டில் வடபுறம் உள்ள தரைப்பாலத்திற்கு அருகே வந்துகொண்டிருந்தபோது, பசுபதிபாளையம் போலிசார் வாகன தணிக்கையில் இருந்தபோது, அவர்களை கண்டவுடன் TN 42 AZ 8589 HONDA SHINE இருசக்கர வாகனத்தில் வந்தவர் திரும்பி செல்ல முயன்ற போது, போலிசார் பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் செல்லதுரை என்று கூறினார். அந்த நபர் ஆஜர் எதிரிதான். பின்னர் போலிசார் அவரை எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது, ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை திருடி வந்ததாகவும், பேண்டு பாக்கெட்டிலிருந்து 7 பவுன்

எடையுள்ள தாலிக்கொடியை தாந்தோணிமலை, அருகம்பாளையம் அருகே ஒரு வயதான அம்மாவிடமிருந்து பறித்ததாகவும், கூறி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் பழனி - மூலனூர் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணிடமிருந்து தாலிக்கொடியை பறித்ததாகவும், நெல்லிக்கோம்பை ரோட்டில் ஒரு வயதான பாட்டியிடம் ஒரு செயினை பறித்ததாகவும், ஒத்தையூர் அருகே ஒரு அம்மாவிடம் வழி கேட்பது போன்று ஒரு செயினை பறித்ததாகவும், துளசிக்கொடும்பு அருகே நடந்து வந்த ஒரு அம்மாவிடம் செயினை பறித்ததாகவும், அந்த செயினை சித்தி வஞ்சியம்மாளிடம் கொடுத்து முத்தூட்பின்காப்பில் அடகு வைத்ததாகவும் கூறினார். பின்னர் TN 42 AZ 8589 **HONDA SHINE** இருசக்கர வாகனத்தை தாசநாயக்கம்பட்டியில் ஒரு வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், சின்னதாராபுரம் அருகே ஒரு அம்மாவிடம் நகையை பறித்ததாகவும், நாயக்கனூர், இரட்டைக்கண் பாலம் அருகே ஒரு இருசக்கர வாகனத்தில் வந்த பெண்ணை வழிமறித்து நகையை பறித்ததாகவும், பறித்த நகைகளை விஸ்வநாதபுரியில் எனது வீடு மற்றும் நெரூரில் எனது அண்ணன் மாமனார் அந்தோணி வீடு, வெங்கமேடு என்எஸ்கே நகரிலுள்ள எனது அக்கா மாரியாயி வீடு ஆகிய இடங்களில் நகைகளை மறைத்து வைத்திருப்பதாகவும், கரூர் முத்தூட்பின்காப்பில் எனது சித்தி வஞ்சியம்மாள் அடகு வைத்த தங்க நகையையும் அடையாளம் காட்டுவதாக கூறினார்.

2. பின்னர் பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் எதிரி மற்றும் எங்களை அழைத்துக்கொண்டு எதிரி கூறியபடி **"என்னை அழைத்துச் சென்றால் விஸ்வநாதபுரியில் கொள்ளையடித்து மறைத்து வைத்துள்ள விஸ்வநாதபுரியில் உள்ள எனது வீடு மற்றும் நெரூரில் அண்ணன் மாமானார் வீடு, வெங்கமேடு, என்எஸ்கே நகரிள்ள அக்கா மாரியாயி வீடு ஆகிய இடங்களில் மறைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து ஆஜர்படுத்தினார். கரூர் முத்தூட்பின்காப்பில் சித்தி வஞ்சயிம்மாள் அடகு வைத்துள்ள தங்க நகைகளை அடையாளம் காட்டினார். கொள்ளையடித்த இடங்களையும் அடையாளம் காட்டுகிறேன் எனக் கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்".** ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் சுப்பிரமணி கையொப்பம் செய்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிளிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் சுப்பிரமணி கையொப்பம் செய்தார். ஆஜர் எதிரி ஆஜர்படுத்திய இருசக்கர வாகனம், ஆஜர்படுத்திய நகை மற்றும் வீடுகளிலிருந்து எதிரி எடுத்து ஆஜர்படுத்திய நகைகளை போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம்

கைப்பற்றினார்கள். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**